# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2244/3 - 2021 සැප්තැම්බර් මස 06 වැනි සඳුදා - 2021.09.06

*2244/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடத்திற்குப் பொறுப்பான அமைச்சராகவிருக்கும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், வோட்டர் ப்ரொன்ட் ப்ரொபர்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் தொடர்பில் 2018, ஒகத்து 14 ஆந் திகதிய 2084/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான, 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளைக்கு மேலதிகமாக, இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :-

2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆந் திகதிய 2084/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான, 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 1847/36 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகமானது, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து பதினான்கு (14) மாதங்களையும் இருபது (20) நாட்களையும் கொண்டவொரு மேலதிக காலப்பகுதிக்கு நீடிப்பதற்கென, பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(4) மேற்கூறப்பட்ட "மேல் மாகாணத்தில் கொழும்பு 2, க்ளென்னி வீதியில் இரண்டு கட்டடங்களாக முன்னெடுக்கப்படும் ஓர் ஆடம்பர ஹோட்டல், மாநாட்டு நிலையம், இணைந்த வசதிகளுடனான பொழுதுபோக்கு, சர்வதேசத் தரத்திலான கடைத் தொகுதி, ஆடம்பரக் கூட்டாதனங்கள், சேவைக் கட்டிடத் தொடர் மாடிகள் மற்றும் அலுவலக இடவசதி ("ஒருங்கிணைக்கப்பட்ட


1A - PG 5419 — 545 (2021/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

உல்லாச விடுதி") என்பன உள்ளடங்கிய ஆடம்பர பன்முகத் தொழிலொன்றை அபிவிருத்தி செய்தல், நிர்மாணித்தல், ஆயத்தம் செய்தல், பணிகளைக் கவனித்தல், சொந்தக் கட்டிடமாக வைத்திருத்தல், முகாமை செய்தல், தொழிற்படுத்துதல், விற்பனை செய்தல், குத்தகைக்கு விடல் மற்றும் வாடகைக்கு விடல் ஆகியவற்றுக்கான கருத்திட்டமொன்றை அமைக்கும் கருத்திட்டமானது" 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அதனது வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்குதல் வேண்டும்."

**மஹிந்த ராஜபக்ஷ** பா. உ.,
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்
திட்ட அமுலாக்கல் அமைச்சர்.

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்
திட்ட அமுலாக்கல் அமைச்சு,
2021, செத்தெம்பர் 06.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.